தமிழ்நாடு அரசு
வணிகவரித்துறை

## ஏல அறிவிப்பு

ந.க. 960/1990/அ3

திரு எஸ். இராதாகிருஷ்ணன், (கரூர் கிழக்கு வரிவிதிப்பு சரகம்) என்பவர், தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் 1977–78, 1980–81, 1981–82 ஆகிய ஆண்டுகளில் வணிகம் செய்த வகையில், தமிழக அரசுக்கு செலுத்த வேண்டிய விற்பனை வரி பாக்கி ரூ.2,26,322.00 (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தி ஆறாயிரத்து முன்னூற்று இருபத்தி இரண்டு மட்டும்) இதுவரை செலுத்தப்படாததால் வரி நிலுவைதாரர் திரு எஸ். இராதாகிருஷ்ணன், என்பவருக்கு சொந்தமான கீழ்க்கண்ட விபரப்படியான அசையாச் சொத்து 26.05.2010 புதன் கிழமை அன்று காலை 11.00 மணிக்கு பகிரங்க ஏலம் விடப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

### சொத்து விபரம்

ஈரோடு மாவட்டம், ஈரோடு டவுன், புதிய எண் 15, பழைய எண்.10, பொற்கை பாண்டியன் வீதி, எஸ்.கே. தோட்டம், மரப்பாலம், ஈரோடு என்ற முகவரியிலுள்ள வீடு முழுவதும் ஜப்திக்கு உட்பட்டதாகும்.

ஒம்/– xxxxxxxxxxxx
உதவி ஆணையர் (வவ) (முகூபொ)
நேதாஜி சாலை வட்டம், ஈரோடு

### நிபந்தனைகள்

1. ஏலம் கேட்பவர்கள் உயர்ந்த பட்சமாக கேட்கப்படும் ஏலத் தொகையில் 15 சதவிகிதம் முன்பணமாக உடனடியாகச் செலுத்த வேண்டும்.
2. ஏலத்தை ஏற்றுக் கொள்ளவும், நிராகரிக்கவும், மறு தேதிக்கு ஒத்திவைக்கவும், இத்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் உண்டு.
3. உயர் அலுவலர்களின் ஒப்புதல் பெற்ற பின்னரே ஏலம் உறுதி செய்யப்படும்.
4. மேற்கண்ட ஏலம் தொடர்பான மற்ற நிபந்தனைகளை மேற்கண்ட அலுவலகத்தில் நேரில் தெரிந்து கொள்ளவும்.

மேலும் விபரங்களுக்கு நேரிலோ அல்லது 0424–2241470 என்ற தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளவும்.